இருமாநிலங்களுக்குள்ள பிரச்சினை. பல கேள்விகள் மூலம் விளக்கங்களைச் சொல்லி, அதனுல் அந்தத் திட்டத்திற்குப் பாதகம் ஏற்பட வேண்டாம் என்பதுதான்.

பயணித் துணைவரில்லாத பேருந்துகள்

* 663 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

கண்டக்டர்கள் இல்லாத பஸ்களை விட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தமிழ்நாடு அரசுப் போக்குவரதுத் துறை, பயணித் துணை (conductor) இல்லாமல் நீள் தொலை விரைவுப் பேருந்து ஒன்றைச் சோதனை அடிப்படையில் ஓட்டுவதென்று திட்டமிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மேலை நாடுகளில் இயந்திரத்திலே காசு போட்டு டிக்கெட் பெற்றுக்கொள்ளும் நிலைமை வளர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் மிகவும் நாணயம் உள்ளவர்கள். மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இருப்பதற்காகவாவது, பரீட்சார்த்தமாக விரைவில் டிக்கெட் கொடுக்கும் இயந்திரத்தை பஸ்களில் பொருத்தி, கண்டக்டர்களே இல்லாத அளவுக்கு ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மேலை நாடுகளினுள்ள திட்டத்தை தமிழ்நாட்டிலே தற்போது அமல் படுத்துவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன. நாணயத்தில் நம்பிக்கையில் நாம் அதிக தரம் உள்ளவர்களாக இருக்கலாம். இருந்தாலும்கூட, கண்டக்டர்களுக்கும் வேலை இல்லாமல் போய்விடக் கூடாது. பொதுவாக நெடுந்தூர பேருந்துகள் இரவு நேரங்களில் செல்வதால் அதிலுள்ள கண்டக்டர்களுக்கு முழுநேரமும் வேலை இருப்பதில்லை. முதல் புறப்படுமிடத்திலேயே டிக்கெட்டுகள் ' புக் ' ஆகிவிடுகின்றன. இடையிலே இருக்கும் நகரங்களில் புக்கிங் ஆபீஸ்கள் இருக்கின்றன. சோதனை அடிப்படையில் பார்த்தாலும் டிக்கெட் கொடுக்கும் இயந்திரங்களைப் பொருத்துவது சரியாக இருக்காது. மேலும் இதற்கும் ஒரு சில தொழிற்சங்கத்து தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, பஸ்ஸில் பயணம் செய்கிறவர்களுக்கும் கண்டக்டர்களுக்கும் அடிக்கடி தகராறுகள் வந்துவிடுகின்றன. அதைப் போக்குவதற்காக பஸ்களிலே குறிப்பாக நகரங்களிலே ஓடுகின்ற பஸ்களிலே பெண்களை கண்டக்டர்களாகப் போட்டால் அவர்கள் அமைதியாகவும் அன்பாகவும் பதில் சொல்வார்கள், தகராறுக்கே வழியில்லாமல் போய்விடும், எனவே அந்த முறையைக் கொண்டுவருவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பஸ்ஸுக்கு வெளியிலேதான் நடக்கின்றன, அந்தத் தகராறுகள் பஸ்ஸுக்குள்ளே வந்துவிடக்கூடாது.

திருமதி. த. ந. அனந்தநாயகி : மேலை நாடுகள் போன்று மெஷின் வைப்பது என்று அரசாங்கம் முடிவுசெய்து கொண்டுவந்தால் வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகமாகப் போய்விடும். எனவே மேலைநாடு களிலே இருக்கிற சில திட்டங்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதற்காக மின்விசிறிகளை எல்லாம் எடுத்துவிட்டு பனைமட்டைகளால் ஆன விசிறிகளை வைத்துக் கொள்ளலாம் என்று உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

திரு. துரை முருகன் : நீண்ட நெடுந்தூரம் போகிற வண்டிகளில் பயணம் செய்கிற பயணிகளுக்குக் களைப்பு ஏற்படாவண்ணம் இருக்க விமானத்திலே அழகிய இளம் பணிப் பெண்கள் நியமிக்கப்பட்டிருப் பதைப்போல் அரசாங்க பஸ்களில் நியமிக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அழகினால் சமயத்தில் ஆபத்தும் வருவதுண்டு.

திரு. எம். தேவராசன் : சில பஸ்களிலே கண்டக்டர்கள் டிக்கட்டுகளைக் கிழிக்கும்பொழுது எச்சிலைத் தொட்டுக் கிழிக்கிறார்கள். அது சிலருக்கு அருவருப்பாக இருக்கிறது. எனவே அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அப்படியெல்லாம் டிக்கட்டு களைக் கிழிக்கவேண்டாம் என்று ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட் டிருக்கிறது.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, முதல் சோதனை பேருந்துகள் எந்த வழித்தடத்தில் எப்பொழுது விடப்படும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எப்பொழுது விடுவோம் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்தலாம் என்று ஒரு சாரார் காத்துக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களின் சம்மதத்தோடு சோதனை ஓட்டம் விடலாம் என்று அரசாங்கம் கருதிக்கொண்டிருக் கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, கண்டக்டர் வேலைக்கு எஸ்.எஸ்.எல்.சி. தேறாதவர்களையும் முன்னாலே நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது எஸ். எஸ். எல், சி. தேர்வு பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டிருக்கிறது. எஸ். எஸ். எல். சி. தேர்வு பெறாதவர்கள் வேலை தேடித் தரும் நிறுவனங்களில் தங்க

ளுடைய பெயர்களைப் பதிவு செய்துகொண்டு காத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதை மாற்றி விதியைத் தளர்த்தி எஸ். எஸ். எல். சி. தேறுதவர்களையும் நியமிப்பதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கண்டக்டர் லைசென்ஸ் பெற்றவர்கள எஸ். எஸ். எல். சி. தேறியிருநதால் அவர்களுக்கு முன் சலுகை அளிக்கப்படுகிறது. அவர்களும் வேலையில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களும் கண்டக்டர்களாக வருகிறோம் என்று சொல்கிற சூழ்நிலை இருக்கிறது. திறமையாக இருப்பார்களானால் எஸ். எஸ். எல். சி. குறைவாகப் படித்திருந்தாலும் அவர்களை எடுத்துக்கொள்வதிலே இப்பொழுது விதிகள் ஒன்றும் குறுக்கே இல்லை.

பழனியில் முருகன் கோயில் நிர்வாகத்தினரால் நடத்தப்படும் கல்லூரிகள்.

* 664 வினா.—திரு. என் கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி முருகன் கோயில் நிர்வாகத்தின் மூலமாக நடத்தப்படும் கல்லூரிக்காக 1970–71-ம் கல்வி ஆண்டில் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நடத்தப்படும் நான்கு கல்லூரி களுக்கும 1970-71-ம் கல்வி ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ. 9,17,753.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பழனி தேவஸ்தானத்தினால் நிர்வகிக்கப்படும் கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு குறிப்பாக பழனி தேவஸ்தானம் நடத்துகின்ற காரணத்தினாலே காவடி ஆட்டம், கரக ஆட்டம் போன்றவற்றில் பயிற்சி கொடுக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதா ? காவடிச் சிந்து என்பது, திருப்புகழில் சேர்க்கப்பட்டு, சிறப்புப் பாடமாக வைக்க அரசு ஆவன செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பழனித் திருக்கோயில் நடத்திவருகின்ற காரணத்தினாலேயே காவடி ஆட்டம் கற்றுக் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. அங்கேயுள்ள செந்தமிழ்க் கல்லூரியின் மூலம் தமிழ்ப்பாடங்கள் எல்லாம் கற்றுக்கொடுக்கப் படுகின்றன.

திரு. துரைமருகன் : தலைவர் அவர்களே, பழனியிலே உள்ள கடவுள் முருகக் கடவுள், தமிழ்க் கடவுள், அப்பனுக்கே தமிழ் போதித்த கடவுள், அப்படியிருக்கும்போழுது ஸ்ரீதண்டாயுதபாணி என்று பெயர் போட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறதே, அந்த ஸ்ரீ என்ற சொல் வடமொழிச் சொல்லாயிற்றே, எனவே அதை நீக்கிவிட்டுத் தமிழ்ப் பெயர் வைப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?